අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref } ED/01/44/01/01-2
ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }
දිනය / திகதி / Date } 2021.11.

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**பாடசாலைகளை ஆரம்பித்ததன் பின்னர் தரம் 10 மற்றும் 11 வகுப்பினருக்கான கற்றல் கற்பித்தல் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையாக கற்றல் உள்ளடக்கங்கள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.**

சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பாடசாலைகளை மீள ஆரம்பித்ததன் பின்னர் தரம் 1 முதல் 11 வரையிலான சகல வகுப்பினருக்கும் சகல பாடங்களுக்குமுரியதாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு அத்தியாவசியமான கற்றல் உள்ளடக்கங்கள் மற்றும் அதற்குத் தேவையான கால எல்லைகள் தொடர்பான வழிகாட்டல்களை வகுப்புக்களின் அடிப்படையில் வழங்குமாறு தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரியுள்ளோம்.

சகல பாடசாலைகளதும் தரம் 10, 11 வகுப்புக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அவ் வகுப்புக்களுக்குரிய கற்றல் கற்பித்தல் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய கல்வி நிறுவகத்தால் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்கள் தொடர்பான சகல திட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களை இத்துடன் தங்கள் கவனத்திற்காக அனுப்பிவைப்பதுடன் அந்த திட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆகியவற்றினூடாக (www.nie.lk, channelnie.lk) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இது தொடர்பாக தங்களது மாகாணத்தின் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், சகல பாடங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், பாடங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், ஆகியோருக்கு இது தொடர்பாக அறிவுறுத்தி அதனடிப்படையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் கே.கபில. கே.சீ.கே பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் - 1. அனைத்து வலயக் கல்விச் செயலாளர்கள்
2. பணிப்பாளர் நாயகம் – தேசிய கல்வி நிறுவகம்
3. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம்